சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை

# கலை மற்றும் பண்பாடு
# அருங்காட்சியகங்கள்
# தொல்லியல்

## மானியக் கோரிக்கை எண் : 29

## அறிவிப்புகள்

**2023-2024**

## தங்கம் தென்னரசு

தொழில்துறை அமைச்சர்

©

தமிழ்நாடு அரசு
2023



பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

–அய்யன் திருவள்ளுவர்



# கலை பண்பாட்டுத் துறை

## அறிவிப்புகள்

## 2023-2024

1. **தமிழ்நாட்டின் கலை வடிவங்களை அழியாமல் பாதுகாக்கவும், அவற்றை வளர்க்கவும் 200 அரசு கல்லூரிகளில் மாணாக்கர்களுக்கு கலைப் பயிற்சிகள் ரூ.1.70 கோடி செலவில் வழங்கப்படும்.**

கல்லூரிகளில் பயிலும் மாணவ / மாணவியர் கலைப் பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் அவர்களின் மனம் ஒருமுகப்பட்டு நினைவாற்றல், படைப்பாற்றல் மற்றும் கற்கும்திறன் மேம்படும். 200 அரசு கல்லூரிகளில் நிகழ்த்துக் கலை மற்றும் கவின் கலைகளில் வாரத்திற்கு இரண்டு நாட்கள் மாணாக்கர்களுக்கு பயிற்சியளிக்கப்படும். இதற்கென தொடரும் செலவினமாக ரூ. 1.20 கோடியும் கலைப் பயிற்சி பொருட்கள் வழங்கிட தொடராச் செலவினமாக ரூ. 50 இலட்சமும் என மொத்தம் ரூ.1.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**Preserving and promoting the art forms of Tamil Nadu by conducting art training classes for two days per week for the students of 200 Government Colleges at a cost of Rs. 1.70 crores.**



**2. சென்னை மற்றும் திருவையாறு அரசு இசைக் கல்லூரிகளில் தவில் மற்றும் நாதசுரம் பிரிவுகளில் ரூ.18 இலட்சம் செலவில் பட்டப்படிப்பு தொடங்கப்படும்.**

அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் தவில் மற்றும் நாதசுரம் ஆகிய கலைகளில் பயின்று வரும் மாணாக்கர்கள் மேல்படிப்பை தொடர ஏதுவாக முதற்கட்டமாக சென்னை மற்றும் திருவையாறு தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் தவில் மற்றும் நாதசுரம் கலைகளுக்கான பட்டப்படிப்புகள் தொடங்கப்படும். ஆசிரியர்களுக்கான தொகுப்பூதியத்திற்காக தொடரும் செலவினமாக ரூ.8 இலட்சமும் கலைப் பயிற்சி பொருட்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கு தொடராச் செலவினமாக ரூ.10 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**New degree courses in the disciplines of Nadhaswaram and Thavil will be started in Tamil Nadu Government Music Colleges, Chennai and Thiruvaiyaru at a cost of Rs. 18 lakhs.**



**3. சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் அனைத்து வசதிகளுடன் கூடிய மூன்று புதிய வகுப்பறைகள் மற்றும் நூலகம் ரூ. 20.92 கோடி செலவில் கட்டப்படும்.**

சென்னை அரசு கவின் கலைக் கல்லூரி, நூற்றாண்டு கடந்த பழமையான கட்டடத்திலும் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள சில கட்டடங்களிலும் செயல்பட்டு வருகிறது. மாணாக்கர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான வகுப்பறை வசதிகள் ஏற்படுத்தும் வகையில் அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் வரைமுறைப்படி பதிப்போவியம், துகிலியல், கலை வரலாறு ஆகிய பிரிவுகளுக்கு வகுப்புகளும் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய நூலகமும் கட்டுவதற்கு தொடராச் செலவினமாக ரூ. 20.92 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**New class rooms with all amenities for the Departments of Printing, History of Arts and Textile and a library will be constructed in Government College of Fine Arts, Chennai at a cost of Rs. 20.92 crores.**



**4. கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியில் ரூ.1.97 கோடி செலவில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும்.**

கோயம்புத்தூர் அரசு இசைக்கல்லூரியில் புதிதாக தொடங்கப்பட்ட குரலிசை, வீணை, வயலின், பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் பட்டப்படிப்புகள் மற்றும் நாதசுரம், தவில் ஆகிய பிரிவுகளில் பட்டயப்படிப்புகளுக்காக 8 வகுப்பறைகள் தற்போது உள்ள கட்டடத்தின் இரண்டாம் தளத்தில் கட்டப்படும். இதற்கென ரூ.1.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**Additional class rooms in Government Music College, Coimbatore will be constructed at a cost of Rs. 1.97 crores.**



**5. புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்கள் மற்றும் ஊரக பகுதிகளில் 20 கூடுதல் சவகர் சிறுவர் மன்றங்கள் ரூ. 58 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.**

தமிழ்நாட்டில் தற்போது 30 மாவட்டங்களில் செயல்படும் சவகர் சிறுவர் மன்றங்களை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கம் செய்திடும் வகையில் 8 மாவட்டங்களிலும், பெருநகரங்களில் உள்ள மாணாக்கர்களுக்கு இணையாக கலைப் பயிற்சிகளை பழங்குடியினர் பகுதிகள் மற்றும் ஊரக பகுதிகளில் உள்ள சிறார்களும் பெற்று பயனடையும் வகையில் ஊரக பகுதிகளிலும் மற்றும் மண்டல மையங்கள் செயல்படும் இடங்களிலும் 12 புதிய சவகர் சிறுவர் மன்றங்கள் தோற்றுவிக்கப்படும். இதற்கென தொடரும் செலவினமாக ரூ. 48 இலட்சமும் பயிற்சிப் பொருட்கள் வாங்க தொடராச் செலவினமாக ரூ. 10 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 58 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**20 additional Jawahar Siruvar Manrams will be established in newly formed Districts, places of Regional Cultural Centres and Rural areas at a cost of Rs. 58 lakhs.**



**6. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் திரையரங்கம் ரூ.50 இலட்சம் செலவில் நவீன முறையில் மேம்படுத்தப்படும்.**

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வளாகத்தில் அமைந்துள்ள போதிய பராமரிப்பின்றி உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் திரையரங்கம், இங்கு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள 50 ஆண்டுகளுக்கும் மேலாக பாதுகாக்கப்பட்டு வரும் ஒலி-ஒளி நாடாக்கள் மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட பாரம்பரியக் கலைகளை உள்ளடக்கிய ஒளித் தட்டுகளை பார்வையாளர்கள் பார்த்து பயன்பெறும் வகையில் நவீன முறையில் புதிய உபகரணங்கள் வாங்கி மேம்படுத்தப்படும். இதற்கென ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**The Muthamizharignar Kalaignar Theater of Tamil Nadu Eyal Esai Nataka Manram will be renovated at a cost of Rs. 50 lakhs.**



**7. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தில் பழம்பெரும் கலைஞர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் கலைப்படைப்புகள் ரூ. 20 இலட்சம் செலவில் டிஜிட்டல் முறையில் ஆவணப்படுத்தி பாதுகாக்கப்படும்.**

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் நடத்தப்படும் கலைமாமணி விருது வழங்கும் விழாக்களில் திறந்து வைக்கப்படும் பழம்பெரும் கலைஞர்களின் திருவுருவப்படங்கள் டிஜிட்டல் முறையில் ஆவணப்படுத்தி பாதுகாக்கப்படும். மேலும், இவர்களது வாழ்க்கை வரலாறு மற்றும் கலைப்படைப்புகளை கலைஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவ - மாணவியர்கள் கணினியில் தொடு உணர்வுடன் பார்த்துப் பயன்பெறும் வகையில் நவீன மயமாக்கப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூ. 20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**The profiles and works of legendary artistes of Tamil Nadu Eyal Esai Nataka Manram will be preserved and digitally documented at a cost of Rs. 20 lakhs.**



8. **தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக கலாச்சாரப் பரிமாற்றத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாக உயர்த்தப்படும்.**

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், கலாச்சார பரிவர்த்தனை திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டின் சிறப்பையும் பெருமையையும் எடுத்துக்கூறும் வகையில் செவ்வியல் மற்றும் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தி வருகிறது. இத்திட்டத்திற்கான நிதி நல்கை ரூ. 15 இலட்சத்திலிருந்து ரூ. 50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென தொடரும் செலவினமாக கூடுதலாக ரூ. 35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**The grant for Cultural Exchange Program through the Tamil Nadu Eyal Esai Nataka Manram will be enhanced from Rs. 15 lakhs to Rs. 50 lakhs.**



**9. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் நல்கைத் தொகையினை உயர்த்திடவும், அலுவலகத்திற்கான தளவாடங்கள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்திடவும் ரூ. 1.09 கோடி ஒதுக்கப்படும்.**

நாட்டுப்புறக் கலைஞர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்யும் நோக்கில் அனைத்து நலத் திட்டங்களையும் தொய்வின்றி செயல்படுத்திடும் வகையில் நலத்திட்டத்திற்கான நிதி மற்றும் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் நிருவாகச் செலவுகளுக்கான தொடர் ஒதுக்கீட்டு நிதியினை ரூ. 35 இலட்சத்திலிருந்து ரூ. 1 கோடியாகவும், அலுவலகத்திற்கான தளவாடங்கள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்திட தொடராச் செலவினமாக ரூ. 9 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.1.09 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**The grant of Tamil Nadu Folk Artistes Welfare Board will be enhanced from Rs. 35 lakhs to Rs. 1 crore and Rs. 9 lakhs will be allocated for purchase of Furniture and Equipments.**



# அருங்காட்சியகங்கள் துறை

## அறிவிப்புகள்

## 2023-2024

**1. சென்னை அரசு அருங்காட்சியகத்தின் வளர்கலைக் கூடம், மானுடவியல் கூடம், சிறுவர் அருங்காட்சியகம் மற்றும் பாந்தியன் கட்டடங்கள் ரூ. 10 கோடி செலவில் பழுதுபார்த்து சீரமைக்கப்படும்.**

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள வளர்கலைக் கூடம், மானுடவியல் கூடம், சிறுவர் அருங்காட்சியகம் மற்றும் பாந்தியன் கட்டடங்களின் முகப்புத் தோற்றம், பழுதடைந்துள்ள கூரைப் பகுதிகள், ஜன்னல்கள் மற்றும் சேதமடைந்துள்ள சுவர் பகுதிகளை பழுதுபார்த்து புதுப்பொலிவுடன் வண்ணம் தீட்டி புத்தாக்கப் பணிகள் மேற்கொள்ள தொடராச் செலவினமாக ரூ. 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**Repair and Renovation of Contemporary Art Gallery, Anthropology, Children's Museum and Pantheon Buildings in the Government Museum, Chennai will be taken up at a cost of Rs. 10 crores.**



**2. அனைத்து அருங்காட்சியகங்களிலும் உள்ள சேகரிப்புகளை பட்டியலிடுவதற்கு தனிப் பயனாக்கப்பட்ட மென்பொருள் "அருங்காட்சியக தகவல் அமைப்பு" ரூ.1.5 கோடி செலவில் உருவாக்கப்படும்.**

அனைத்து அருங்காட்சியகங்களில் சேகரிப்பில் உள்ள பொருட்களைப் பற்றிய தகவல்களை அணுகவும், சேகரிப்புகளை நிர்வகிக்கவும், மையப்படுத்தப்பட்ட ஒரு தரவுத்தளத்தை வழங்கும் அருங்காட்சியக பட்டியல் மென்பொருள் உருவாக்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.1.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**"Museum Information System" – A customized software will be created for digitizing the collections and artefacts in all museums in the Department of Museums at a cost of Rs. 1.5 crores.**



**3. வேலூர் அரசு அருங்காட்சியகம் பார்வையாளர்களுக்கான வசதிகளுடனும் நவீன காட்சியமைப்பு மற்றும் ஊடாடும் தொழில்நுட்பங்களுடனும் ரூ. 1 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.**

அருங்காட்சியகத் துறையில் சென்னைக்கு அடுத்து அதிக பார்வையாளர்களின் வருகையைப் பெற்றுள்ள வேலூர் அரசு அருங்காட்சியகத்தினை காலத்திற்கேற்றவாறு நவீன ஒளியமைப்பு, புதிய காட்சிப் பெட்டிகள் மற்றும் ஊடாடும் தொழில்நுட்பங்களுடன் மேம்படுத்திட தொடராச் செலவினமாக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**Government Museum, Vellore will be upgraded with modern lighting, display cases and interactive systems at a cost of Rs. 1 crore.**



**4. மதுரை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள சிற்பப் பூங்கா மற்றும் விலங்கியல் காட்சிக் கூடங்கள் ரூ. 50 இலட்சத்தில் மேம்படுத்தப்படும்.**

மதுரை அரசு அருங்காட்சியகத்தில் திறந்தவெளியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள கற்சிற்பங்கள், கல்வெட்டுக்கள் ஆகியவற்றை பாதுகாப்பாக மேற்கூரை அமைத்து சிற்பப் பூங்காவை சீரமைக்கவும் விலங்கியல் பொருட்களை சுற்றுச்சூழல் அமைப்புடன் காட்சிப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளவும் தொடராச் செலவினமாக ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**The Stone Sculptures Park and Zoological Diorama display at Government Museum, Madurai will be upgraded at a cost of Rs. 50 lakhs.**



**5. கடலூர் அரசு அருங்காட்சியகத்தின் உள்கட்டமைப்பு மற்றும் காட்சியமைப்பு முறைகள் நவீன முறையில் ரூ.50 இலட்சத்தில் மேம்படுத்தப்படும்.**

கடலூர் அரசு அருங்காட்சியகத்தின் தற்போதுள்ள காட்சியமைப்பினை சுற்றுச் சூழலியல் முறையில் மாற்றி புதிய காட்சிப் பெட்டிகள், நவீன ஒளியமைப்பு, ஊடாடும் தொழில்நுட்பங்கள் மற்றும் பார்வையாளர்களுக்கான வசதிகளுடன் மேம்படுத்திட தொடராச் செலவினமாக ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**The Display of artefacts and specimens in Government Museum, Cuddalore will be upgraded at a cost of Rs. 50 lakhs.**



6. **சென்னை ஹுமாயுன் மகால் பாரம்பரிய கட்டடத்தில், 'சுதந்திர தின அருங்காட்சியகம்' அமைப்பதற்கு ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.8.2022 அன்று சுதந்திர தின விழாவில் அறிவிக்கப்பட்டவாறு, இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் 260 ஆண்டு கால தொடர் பங்களிப்பினை வருங்கால இளம் சமுதாயத்தினர் அறிந்து கொள்ளும் வகையில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய 'இந்திய சுதந்திர தின அருங்காட்சியகம்' சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பழமை வாய்ந்த ஹுமாயுன் மகாலில் அமைத்திட திட்ட அறிக்கை தயாரிக்க தொடராச் செலவினமாக ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**Detailed Project Report for the establishment of "Independence Day Museum" at the Humayun Mahal heritage building in Chennai will be prepared at a cost of Rs. 50 lakhs.**



# தொல்லியல் துறை

## அறிவிப்புகள்

## 2023-2024

1. **தமிழ்நாட்டின் தொன்மையான பண்பாட்டு மரபுகளை காலவரிசைப்படி அறிந்து கொள்வதற்காக தமிழ்நாட்டின் தொல்லியல் மற்றும் வரலாற்று நிலவரைபடத் தொகுதி (Atlas) தயாரிக்கும் பணிகள் ரூ. 2 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.**

தமிழ்நாட்டின் தொன்மையான பண்பாட்டு மரபுகளை காலவரிசைப்படி அறிந்து கொள்வதற்காக புவியியல் தகவல் முறைமை (Geographical Information System) மூலம் தொல்லியல் மற்றும் வரலாற்று நிலவரைபடத் தொகுதி (Atlas) விளக்கங்கள் மற்றும் வரைபடங்களுடன் மின்பதிப்பாக்க முறையிலும் நூல் வடிவிலும் தயாரிக்கும் பணிகள் 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ. 94 இலட்சத்திலும், 2024-2025 ஆம் நிதியாண்டில் ரூ. 81 இலட்சத்திலும், 2025-2026 ஆம் நிதியாண்டில் ரூ. 25 இலட்சத்திலும் ஆக மொத்தம் ரூ. 2 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

**Preparation of Archaeological and Historical Map (Atlas) of Tamil Nadu for chronological analysis of the ancient cultural heritage of Tamil Nadu will be taken up at a cost of Rs. 2 crores.**



**2. பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னமும் சுற்றுலாத் தலமுமாகிய மதுரை திருமலை நாயக்கர் அரண் மனையில் வேலி மற்றும் புல்வெளித்தளம் அமைக்கும் பணிகள் ரூ. 68.20 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.**

மதுரை நகரில் புகழ்பெற்ற தொல்லியல் சின்னமும் சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவரும் தலமுமாகிய திருமலை நாயக்கர் அரண்மனையில், ஏற்கனவே இருந்து வரும் கம்பி வேலி அமைப்பினை கூடுதலான உயரத்திற்கு நீட்டிப்பு செய்து, முள்கம்பியினை சீரமைப்பு செய்யும் பணிகள் மற்றும் அரண்மனையின் தெற்கு மற்றும் மேற்குப்புறங்களில் புல்வெளித்தளம் அமைத்து பசுமையாக்கிடும் பணிகள் மேற்கொள்ள 2023-2024 ஆம் நிதியாண்டில் தொடராச் செலவினமாக ரூ. 68.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**Grills, fencing and improvement works of gardening in south and west sides of Thirumalai Nayakkar Mahal, Madurai will be taken up at a cost of Rs. 68.20 lakhs.**



## தங்கம் தென்னரசு

**தொழில்துறை அமைச்சர்**

